Name of the Newspaper: Hindu Tamil Date: 29.5.18

# மெட்ரோ ரயில் புதிய செயலிக்கு நல்ல வரவேற்பு

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் புதிய செயலி பயணிகளிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரையில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் (CMRL) என்ற பெயரில் ஒருங்கிணைந்த 'ஆன்ராய்டு செல்போன் 'செயலி' (ஆ.ப்) வசதி, கடந்த ஆண்டு மே மாதத்தில் தொடங்கப்பட்டது.

இந்த புதிய செயலியின் உதவியால் மெட்ரோ ரயில் கட்டண விவரம், வழித்தடங்கள், பயண நேரம், அருகில் உள்ள பஸ் நிலையம் மற்றும் பஸ் எண்கள், பாதுகாப்பு உதவி எண்கள், அட்டையில் ரீசார்ஜ் செய்வது, மாற்றுத்திறனாளிகளுக்கான வசதி, பயணிகளுக்கான முக்கிய அறிவிப்புகள், மெட்ரோ ரயில் நிலையங்களில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்உள்ளிட்ட வசதிகள் மற்றும் தகவல்களைப் பெறலாம்.